# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 130 /பேரூ/2025**
**நாள் : 20.04.2026**

M. ராஜேஸ்வரி,
தலைவர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி மன்றம்,
திருவள்ளூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சித் தலைவர் திருமதி. M. ராஜேஸ்வரி என்பவரது 23.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.04.2025 அன்று பெறப்பட்டு, 130/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சித் தலைவர் திருமதி. M. ராஜேஸ்வரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 23.04.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

“ஆரணி பேரூராட்சியில் சென்ற வருடம் கலைஞரின் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.84 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை பணிகள் தொடங்கப்பட்டது. அப்பணிகளை மேற்கொண்ட சக்தி கன்ஸ்ட்ரக்சன் என்கிற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு சாலைகளை அமைக்கவில்லை. சாலை இருபுறமும் அமைக்க வேண்டிய கான்கிரீட் கோர்வால் மிகவும் குறைவாக அமைத்தது மட்டுமின்றி சாலையின் நடுவில் கொட்ட வேண்டிய ஜல்லி மற்றும் M சேண்ட் மிக மிக அளவு குறைவாக கொட்டி சாலைகளை அமைத்துள்ளார். அதனால் மழைக்காலங்களில் சாலைகள் முழுவதும் தண்ணீரில் மூழ்கி விடுகிறது. சாலை அமைத்து இரண்டே மாதத்தில் சாலையில் புற்கள் முளைத்து விட்டது. அதுமட்டுமின்றி சாலையின் மீது கனரக வாகனங்கள் சென்றால் சாலை மேடு பள்ளமாக மாறிவிடுகிறது. இதனால் பொதுமக்கள் மத்தியில் ஊராட்சி பிரதிநிதிகளுக்கு மிகுந்த அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. இது குறித்த புகார்கள் அரசு துறை சார்ந்த அதிகாரிகள், செயல் அலுவலர், ஆரணி அவர்களுக்கு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு அதுமட்டுமின்றி ஆரணி பேரூராட்சியின் 3வது வார்டு உறுப்பினர் திருமதி. S. பிரபாவதி அவர்கள் நாள் 20.01.2025 அன்று மாவட்ட ஆட்சியரின் குறைதீர் நாளில் புகார் அளித்துள்ளார் என்பதையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே நாங்கள்

வழங்கிய புகார் கடிதங்கள் இந்த புகார் கடிதத்துடன் இணைத்துள்ளேன். துறை சார்ந்த அதிகாரிகளிடம் புகார் அளித்தும் எந்த பயனும் இல்லை. புகார் கடிதம் வழங்கியும் ஒப்பந்ததாரருக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற தரமற்ற முறையில் பணிகளை செய்துவரும், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தரமற்ற முறையில் பணிகள் நடப்பது குறித்து புகார்கள் அளித்தும் செயல் அலுவலர் அவர்கள் ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகையினை விடுவித்துள்ளார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.05.2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கை பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு இம்முறைமன்றத்தில் 06.03.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 25.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் திருமதி. ராஜேஸ்வரி என்பவர் எவ்வித காரணமும் தெரிவிக்காமல், இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

5. எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 06.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட 3வது வார்டு பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் தரத்துடன் பேவர் பிளாக் சாலை அனுமதிக்கப்பட்டது.
- மேற்காணும் சாலைப் பணியின்போது பேரூராட்சி இளநிலை பொறியாளரால் மேற்பார்வையிடப்பட்டு, உதவி செயற் பொறியாளரால் மேலாய்வு மேற்கொள்ளப்பட்டது.
- மேலும் சாலைப் பணியின் தரம் குறித்து மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொண்டு அதன் தரச்சான்றும் பெறப்பட்டுள்ளது.
- எனவே இச்சாலையானது எவ்வித விதிமீறலின்றி மிகுந்த தரத்துடன் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 06.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு தனது 02.03.2026 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 56/2026/அ1ல் தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார். அதில் -

மனுதாரர் திருமதி. M. ராஜேஸ்வரி என்பவரின் புகார் மனு மீதான நடவடிக்கை மேற்கொண்டதில், புகார்தாரர் தெரிவித்துள்ள 3வது வார்டு பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.85.00 இலட்ச மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலை பணி மேற்கொள்ளும்போது பேரூராட்சி இளநிலை பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் தரமாக சாலை அமைக்கப்பட்டு, உதவி செயற் பொறியாளர் அவர்களால் மேலாய்வு மேற்கொள்ளப்பட்டு சாலைப்பணி தரமாக செய்யப்பட்டு, இதற்கான அளவுகள், மேலளவுகள் எடுக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணியின் தரம் குறித்து மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கான தரச்சான்றும் பெறப்பட்டுள்ளது. மேலும், இச்சாலை தரமாக

ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கான தரச்சான்றும் பெறப்பட்டுள்ளது. மேலும், இச்சாலை தரமாக அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதில் எவ்வித தவறும் நிகழவில்லை என்ற அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மூன்றாம் தரப்பு ஆய்வு அறிக்கை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது '' என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரரும் திருவள்ளூர் மாவட்டம் ஆரணி முதல்நிலை பேரூராட்சி மன்றத் தலைவருமான திருமதி. M. ராஜேஸ்வரி என்பவர் தனது 23.04.2025 நாளிட்ட மனுவில், திருவள்ளூர் மாவட்டம், ஆரணி முதல்நிலை பேரூராட்சியில் 2024ஆம் ஆண்டில் கலைஞரின் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.84 இலட்சம் மதிப்பீட்டில் தரமற்ற பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகாருக்கு, எதிர்மனுதாரரான ஆரணி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட 3வது வார்டு பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொண்டபோது பேரூராட்சி இளநிலை பொறியாளரின் மேற்பார்வையிலும் மற்றும் உதவி செயற் பொறியாளரால் மேலாய்வு மேற்கொள்ளப்பட்டும் எவ்வித விதிமீறலின்றி தரமான சாலை அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருவதாக செயல் அலுவலர் தெரிவித்துள்ளதை அவரது அறிக்கை மூலம் தெரிய வருகிறது. மேலும் இச்சாலை பணியின் தரம் குறித்து மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தரச் சான்றும் பெறப்பட்டுள்ளது என செயல் அலுவலர் தெரிவித்திருப்பதையும் அவரது அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், 1998ஆம் ஆண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், பிரிவு 45ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி பேரூராட்சி மன்றத் தலைவரான மனுதாரர் அவரது முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் குறித்து பேரூராட்சி மன்ற தலைவரே உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய நிலையில் மேற்கண்ட சட்டத்தில் மன்ற தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி செயலாற்றாமல், புகாரளிப்பது ஏற்புடையதன்று. எனவே, இனிவருங்காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998ல் மன்றத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளை உணர்ந்து செயல்பட மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், ஆரணி முதல்நிலை பேரூராட்சியின் 3வது வார்டில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பேவர் பிளாக் சாலைப் பணிகள் முறையாக நடைபெற்று உள்ளனவா என்பதை உறுதி செய்திடும் பொருட்டு பேரூராட்சிகளின் இயக்குநரக செயற் பொறியாளரின் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து அக்குழு நேரடியாக கள ஆய்வு செய்து அதன் அறிக்கையை பெற்று அதன் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி. M. ராஜேஸ்வரி,
 தலைவர், ஆரணி முதல்நிலை பேரூராட்சி,
 பொன்னேரி வட்டம், ஆரணி,
 திருவள்ளூர் மாவட்டம் 601 101.

2. செயல் அலுவலர்,
ஆரணி முதல்நிலை பேரூராட்சி, திருவள்ளூர் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–28.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

22/4/26
செயலாளர்
22/4/26